N°-2008/0305 -11/03/2008

ஆதரவுதருவோர்

**“சுவை” உணவகம்**

# தமிழ் ஓலை



வியா எமிலியாவில் உள்ள "மெதானோ"விற்கு அண்மையில் இருப்பிடத்தைக் கொண்டுள்ளது “சுவை” உணவகம்.
Via F.lli Bandiera n°1
Reggio Emilia

இம்மலரில் உள்ள ஆக்கங்களையோ அல்லது பக்கங்களையோ தகாதமுறையில் கையாழ்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

## இந்த ஏட்டில் புதைந்துள்ளவை


ஈழமும் சிங்களமும்

இலங்கை அரசியல்

இத்தாலியில் தமிழர்

எமது அமைப்பு பற்றி

வாழ்த்துக்கள்

அன்பளிப்பு அளித்தோர்

இத்தாலி அரசியலும் வெளிநாட்டவரும்

புதிதாய் ஆட்களை அழைப்பது தொடர்பாக

மகளீர் பக்கம்

சிறுவர் அரங்கம்

இளைஞர் பகுதி

உளவியல்

அறிவியல்

விளம்பரம்

பொது அறிவு

சிரிப்பு

எம்மவர் சிறப்பு

திட்டங்கள்

எதிர்ப்புக்கள்


பிறந்தநாள் வாழ்துக்கள்

புகைப்படங்கள், கவிதைகள், வாழ்த்துக்கள்...

மேலதிகமான தகவல்கள் உள்ளே!

மனம்வருந்துகின்றோம்

கலைமணி.தினகரனின் மறைவிற்காக...
மேலதிகமான தகவல்கள் உள்ளே!

நாம் அரசிடமிருந்து மீளப்பெற வேண்டிய சில நிதி சம்மந்தப்பட்ட விடயங்கள் மற்றும் Mutuo தொடர்பான விளக்கங்கள்

மேலதிகமான தகவல்கள் உள்ளே!

குடும்பம் செழிக்க! நிதித்தொல்லையிலிருந்து மீட்சிபெற,! தொழிலை விஸ்தரிக்க! குழந்தைகளின் பராமரிப்புத்தொடர்பாகத்தடைகள்,! என்னசெய்வது...

அவற்றிற்கு நாம் தகுந்த பாதுகாப்பான முடிவுகளைச் சொல்கிறோம். தேவை ஏற்படின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பணத்தினை உப்படி மீதப்படுத்தவது?
இத்தாலி அரசிடம் இருந்து வெளிநாட்டவர் எப்படிதம்மைப்பாதுகாத்துக் கொள்வது ...?
ஆலோசனைக்க தொடர்பு கொள்ளவும்...

உங்கள் அன்பளிப்பினை
எங்கள் வளர்ச்சிக்காக எதிர்பார்க்கின்றோம்.
எமது வளர்ச்சி உங்கள் எதிர்காலத்தையும்
உங்கள் சந்ததியின் எதிர்காலத்தையும்
தமிழர்களின் ஒற்றுமையினையும்
நிர்ணயிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வணக்கம்

தமிழ் உறவுகளே உங்களுடைய நலன்கருதி எமது அமைப்பு இந்த சேவைகளை வழங்கிவருகிறது.

தேசத்தின் கோலத்தைக்காட்டி பரிதாபத்தைவேண்டி தாம் குளிர்காயும் பட்டியலில் இருந்து எம்மை வேறுபடுத்த எத்தனிக்கின்றோம் எமது இரக்கம் அவர்களின் குறையினையும் தேவைகளையும் தீர்க்கவேண்டுமேயொழிய கனிமொழி வார்த்தை இல்லை என்பதனை உணர்கின்றோம்.

கடந்த காலங்களில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இநஇத இதழின் சேவை தற்போது அதிகப்படி விஸ்தரிக்கப்படவேணஇடிய தேவையில் இருக்கினஇறோம் எனவே தாங்கள் தங்களுடைய ஒத்துளைப்பினைத் தந்து ஊக்கவிக்கமாறு கேட்டுக்கொள்கின்றேன். துற்போது புதிய எழுத்தாளர்களின் இணைப்பு பன்முகப்பட்ட செயற்பாடுகளின் தன்மை எம்மை மென்மேலும் இச்செயற்பாட்டினைத் தட்டிக்கொடுக்கின்றது.

மேலும் ஈஸரர் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் எமது அமைப்பின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்பன் ஆசிரியன்.

UNGA

*ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங் கருதி இடத்தாற் செயின்*

TNGA


ஒருங்கிணைந்த புதிய தலைமுறை
UNIONE DELLA NUOVA GENERAZIONE
via N.lotti n°3 -42026 Canossa - (RE) – Italy
C.F.: 91138190359 Cell: 320/4031696 – 320/4031624,unga2007@libero.it

Associazione della Nuova Generazione Tamil
தமிழ்ப் புதிய தலைமுறை சங்கம்
Tamil New Generation Association.Italy
P.IVA/C.F:9113250355,Cell: 320/4031696–320/4031624,:arugan@libero.it

# உயிர்ப்பின் பெருவிழா

உயிர்த்த இயேசுக்கிறிஸ்த்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவில் அன்பு மிக்க சகோதரர்களே!

இற்றைக்கு இரண்டாயிரம ஆண்டுகளுக்கு முன் கடவுள் தம் ஒரே பேறான குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார். எதற்காக?.....

பாவத்தின் பிடியில் சிக்கித்தவித்த நமக்கு ஓர் விடுதலை அளிக்கவே.

சாத்தானின் சதிவலையில் வீழ்ந்தும் நம்மை தேவன் நேசித்தார்.

பாவ இச்சைகளை இன்பமெனக்கருதி அதில் இருந்து விடுபட முடியாது தவிக்கும் தம் பிள்ளைகள் மீது இரக்கம் கொண்டார்.

“அப்பா பிதாவே” என்று அழைக்கும் புத்திர சுவிகாரத்தை தந்த கடவுள், தம் பிள்ளைகள் கூப்பிடும் வேளையில் இரங்காமல் இருப்பாரோ? ஆகவே, தான் தனது ஒரே பேறானகுமாரனை நமது மீட்புக்காக சிலுவையிலே மரிக்கச் சித்தங் கொண்டார்.

மரித்த தம் குமாரன் மீது அன்புகொண்டு உயிர்த்தெழும்பச் செய்தார்.

அந்த நாளைத்தான் நம்முதாதையர் தொடங்கி நம்மவர் வரை உயிர்த்த திருநாளாக கொண்டாடி வருகின்றோம்.

கிறித்துவுக்குள் பிரியமானவர்களே உயிர்ப்பின் ஞாயிறு என்றால் என்ன? அதை நாம்சற்று விரிவாக ஆராய்வோம். ஏன்நாம் இதனை கொண்டாடவேண்டும்?

இறைவனுக்கும் நமக்கும் இடையில் உள்ள உறவை புதுப்பிப்பதற்காகவே இது போன்ற விழாக்களை நாம் கொண்டாடிவருகின்றோம். கிறிஸ்து பிறப்பு விழா, பாஸ்காபண்டிகை, விருத்தசேதனம், மற்றும் சடங்குகள் இவற்றை விட நாம் மிகவும் உணர்வுடன் கொண்டாட வேண்டிய விழா உயிர்ப்பின் விழாவாகும்.

உயிர்ப்பின் விழா எப்போது ஆரம்பமாகின்றது. புனி லுக்கா சுவிசேஷசத்தின்படி, அவர் பாஸ்காபண்டிகையைமுடித்த பின்பு 40 நாட்கள் சாத்தானால் சோதிக்கப்படுகின்றார். 3 சோதனைகளையும் வெற்றி கொண்டார். இயேசு இந்த 3 சோதனைகளையும் முறியடித்திருக்க முடியும் முறியடித்தால்?, மத் – 26 – 53 பார்ப்போமானால் இவ்விதமாய் சம்பவிக்க வேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்கிறார். பாருங்கள்! அவர் சலுவையில் அறையப்பட வேண்டும் என முற்கூட்டியே எழுதப்பட்டு விட்டது. அப்படியானால் நாம் தாயின் வயிற்றில் இருக்கும்பொழுதே நம்மையும் அறிந்திருப்பார் அல்லவா.

கிறித்து மனிதனிக பூமிக்கு வந்தார். ஆனால் அவர் வல்லமை உள்ளவர், இரக்கம் நிறைந்தவர், தம்தந்தையின் அன்புக்கட்டளைக்கு கீழ்ப்படிந்தவர். தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற வந்தவர். லுக்கா – 22 – 42 “பிதாவே உமக்குசித்தமானால் இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படிசெய்யும் ஆனால் என் சித்தமல்ல உம் சித்தப்படியே ஆகட்டும்.” என்கிறார்.

கிறீத்துவுக்குள் பிரீயமானவர்களே கடவுள் நம்மீது வைத்த அன்பு எவ்வளவு பெரியது...

தம் மந்தையில் இருந்து ஒரு ஆடேனும் சிதறிப்போகாமல் காத்துக் கொண்டார். எல்லாவறறையும் அறிந்திருந்தும் தம் தந்தையின் சித்தம் நிறைவேறக் காத்திருந்நார். தம் சீடரில் ஒருவனான யுதாஸ்கரியோத் தன்னை காட்டிக் கொடுக்க போகின்றான் என அறிந்திருந்தும், அவனை நேசித்தார்...

பேதுரு மறுதலிப்பான் என அறிந்தும் திருச்சபையின் கற்பாறையாக நியமித்தார். அப்படியானால் நம்மை நேசியாமல் இருப்பாரோ...

இயேசுவின் சோதனை காலம் முடிந்த பின்பு யுதர்கள் இயேசுவை பிடித்து பிரதானஆசாரியனான காய்பாவிடம் ஒப்படைத்தனர். இயேசுவை கசையால் அடித்தனர். முகத்திலே துப்பினார்கள் அறைந்தார்கள். விலாவிலே ஈட்டியால் குத்தினார்கள். ஆனால் கிறித்துவோ, மயிர்கத்தரிப்பவன் முன்பாக சத்தமிடாத ஆட்டைப்போல் தம்வாயைத் திவாதிருந்தார். ஏன்?... நம் பாவங்களை சிலுவையிலே கொன்று விடவல்லவா!...

அவர் குற்றமே செய்யாதவர் பிலாத்து கூட அவர் குற்றமற்றவர் எனக்கண்டு இந்த இரத்தப்பழிக்கு நான் பாத்திரன் அல்ல என்றான்.

குற்றம் செய்யாதவர் கைகளில் ஆணிகளா...

அவரது தோள்களில் பாரச்சிலுவை...

அவரது சிரசினில் முள்முடி...

அவரது உடல்தனில் இரத்தவியர்வை...

ஓ...

என்ன பரிதாபம்

பிள்ளையை பெற்ற தாய் கண்ணீர்மல்க நின்றாள்.

மக்கள் கூட்டம் செய்வதறியாது தவிக்கின்றது...

உலகை மீட்க வந்தவரின் மேனியில் ஆடை இல்லை...

மற்றவரின் தாகம்தீர்க்க வந்தவர் நாவறண்டு துவழ்கின்றார்...

இவ்வாறு இருக்க தன்னை பெற்றதாய்க்கு ஆறுதல் கூறுகின்றார்.

சிலுவையின் பாரம் தாங்காமல் மும்முறை தரையிலை வீழ்ந்தார். சிலுவையில் தொங்கும் பொழுதுகூடதனக்காக அல்ல பிறருக்காகவே ஜெபித்தார். பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது இருக்கின்றார்கள் என்றார். நம் கால்கள் தீயபாதையில் நடந்தது, நம் கைகள் தீயவற்றை செய்தது, கண்கள் தீயவற்றை பார்த்தன, இப்பாவ காரியங்களையெல்லாம் சிலுவை மரத்தினிலே கொன்று குவித்தார். இப் பொன்நாளை பெரியவெள்ளி என்கின்றோம்.

அவர் சிலுவையிலே மரித்தபின் மேகங்கள் இருளடைந்தன. தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாக கிழிந்தது. கற்பாறைகள் பிளந்தன. அவர் குற்றம் செய்யாதவர் என இயற்கையே உணர்ந்தது. மரித்த இயேசு 3ம் நாள் உயிர்த்தெழுந்தார், சாவினை ஜெயித்தார், கல்லறையை திறந்து வெற்றிசிறந்தார்.

நம்மை புதிய மனிதர்களாக்கினார்.

"மரித்த இயேசு உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா!
மன்னன் இயேசுஜீவிக்கின்றார் அல்லேலூயா!"

கிறிஸ்த்து தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக, ஆமேன்

திருமதி வதன்


இத்தாலி றெஜியோவில் இருந்து.

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பஞ்சுப்பாதத்தை முன்னெடுத்துத்
தத்தித்தத்தி நடந்தாள்
ஒத்தப்பல்லைச் செருகிக்கொண்டு
முத்து முத்தாய்ச் சிரித்தாள்
மின்னல்கொண்ட கண்ணாலே
நெஞ்சமெல்லாம் இழுத்தாள்
“கொன்ன”மொழி பேசிக்கொண்டு
கவிதையெல்லாம் தொகுத்தாள்
சின்னப்பிஞ்சு செழித்துவர
செவ்விகளைச் சொல்லிடுவீர்...
வாழ்க வாழ்க...

ஒருங்கிணைந்த புதிய தலைமுறை அமைப்புக்களும் சொந்த உறவுகளும், அன்பர்களும்



## இளைஞன் உருமாறினான்

இளைஞனே!
நீ காதலித்ததுண்டா – உன்
காதலுக்குக் காயங்கள் உண்டா
காயங்களில் குருதி வடிந்ததுண்டா – அந்தக்
குருதியிலும் கண்ணீருண்டா

இப்போது நீ எழுதும் எழுத்துக்களில் கவிதை இருக்கும்
அந்தக் கவிதையிலும் கண்ணீர்த்துளி கசிந்திருக்கும்
காலங்கடந்தும் ஞாலத்தில் நிஜமாய் நிலைத்திருக்கும்
காற்றுள்ள இடமெல்லாம் அது கலகஞ்செய்திருக்கும்

வானில் இருந்து வீழ்ந்த துளி உனக்கு வார்த்தை தரவில்லையா
மண்ணில் இருந்து மீண்ட பனி உனக்கு மீதந் தரவில்லையா
மரஞ்செடிகள் கவரி வீசி உனக்கு மங்கலந் தரவில்லையா
பனிமலையும் பாலைநிலமும் உனக்கு புதுவழி தரவில்லையா

உன் காதலின் வலி காவியங்களை உருவாக்கும்
உன் கண்ணீரின் துளி கற்பனைகளைச் சிலையாக்கும்
உன் எண்ணத்தின் விம்பங்கள் இளைஞரைச் சரிபார்க்கும்
உன் கற்பனையோ காலாவதியாகாத கணக்கீடுகளைச் சீர்செய்யும்

நீ உலகத்திற்காய் கவிதையை நிர்மானித்தாய்
உன் தாக்கம் அழகுபடுத்தும் மட்டும் அது நிர்வாணமாய்
காதலால் நீ பெற்றுக்கொண்டாய் கவிதையை நிவாரணமாய்
கவிதை பெற்றுக்கொண்டது கருத்தரித்த நிஜங்களாய்

கவிஞனே!
இப்போது உன் காதலில் – ஒரு
கண்ணியமிருக்கும்
இனியும் காதலிக்கத்தயாராய் – இரு
இனி எப்போதும் நீ
உனக்குச் சொந்தமில்லை – இந்த
உலகிற்கே!

அன்பன் அருகன்

## ஒரு உடலம் காதலால் சடலமானது!

*பெண்ணே!*
*என்னை யென்னவென்பேன் – உன்னால்*
*பேதையானேன் நேற்றுமுதல் !*
*அன்றுமுதல்தானே யுன்னைக்கண்டேன்*
*கடந்தகாலங்கள் மறந்துவிட்டன – நிகழ்*
*காலங்கடந்து ஞாலத்தில்*
*வாழ்வதாய் யேதேதோ நினைவு*
*காமங்கடந்து ஞானத்தில் – நீடு*
*வாழ்வதாய் யேதேதோ உணர்வு*
*சிரிக்கத் தோன்றவில்லை – இனி*
*யாரும் சிரிப்பதும் பிடிக்கவில்லை*
*அடிக்கடி சிரிக்கின்றேன் – ஏன்?*
*அப்போதெல்லாம் உன்முகத்தைத் தரிசிக்கிறேன்*
*உன் சம்மதம் மெனக்குச் சாதகமா பாதகமா?*
*கேட்கத் தோன்றவில்லை – அதைக்*
*கேட்காமலே கடக்கின்ற காலத்தை*
*இரசிக்கத் தூண்டுகிறது*

*பூக்கள் பூத்து வாடுவது போல் – புறப்படும்*
*உன் புன்னகை என்னை வாடவைக்கிறது*
*நர்த்தனத்தில் கொலுசு போல் – நித்தம்*
*உன்சாரீரம் என்சரீரத்தை ஆடவைக்கிறது*
*இது என் ஆண்மைக்கு இழுக்கா – அல்லது*
*புதுக் காதலுக்குச் சிறப்பா*
*எனக்குப் புரியவில்லை!*
*போஜனம் போதுமென்று தோன்றுகிறது – வாசனைப்*
*பூமணம் நாற்றமென்று தோன்றுகிறது*
*உன்சங்கமத்தில் மட்டும் சலிப்பில்லை!*

*ஸ்பரிசங்கள் இல்லாத பார்வையிலும் – பல்*
*ஆயிரம் நிம்மதி ஆழ்ந்ததென்பதை*
*அவ்வப்போது இயற்கையின் படைப்பில்*
*இருந்து உணர்ந்து கொள்கிறேன்!*
*இன்றேனும் இயற்கைக்குச் சம்மதமென்றால்*
*இவ்வுலகிலிருந்து இழிவுடல் – எங்கோ*
*இளைப்பாற எனக்குச் சம்மதம்!*
*இருந்தும் சாவை வெறுக்கிறேன் – ஏன்?*
*அதன்சாராம்சம் சித்தத்திற்குப் புரியாததால். . . .*
*நான் புலம்புகிறேன் என்பது எனக்குத் தெரிகிறது*
*ஆனால் புறந்தள்ள விரும்பவில்லை – மேலும்*
*அதுகூட ஆழ்ந்தசுகத்தையே தருகிறது*
*சோகங்கூட ஒருவித சுகமாய்த்தோன்றுகிறது*
*சொல்லத்தெரியவில்லை.*

*எல்லையில்லா வெட்டவெளியில் – புள்ளிமானாய்த்*
*தொல்லையின்றி துள்ளிக்குதிக்கத் தோன்றுகிறது*
*துணைக்கு உன்னையும், – அங்கு*
*தூதுக்குத் தென்றலையும், தோதாகக்கேட்கிறது*
*நான்புலம்புகிறேன் ஆனால் பூரிப்படைகிறேன்!*
*புரிகிறது நான்பேதையாகிவிட்டேன்*

அன்பன் அருகன்

# கடமையே கண்கண்ட தவம்

***"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்***
***அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு."***
(௨66)

ஒருநாளில் ஒருமுறையாயினும் உலகத்தை உற்றுப்பார்த்து வியக்க வேண்டும்

வாரத்தில் ஒருமுறையாயினும் வாழ்ந்தவரைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்

மாதத்தில் ஒருமுறையாயினும் உன் வாழ்வைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்

வருடத்தில் ஒருமுறையாயினும் நடந்து வந்த பாதைகளைச் சீர் செய்ய வேண்டும்

இப்போது புரிகிறது

விழாக்களும் வழிபாடுகளும் வந்து போவது எதற்காக வென்று.

ஆரம்பத்தில் ஆண்மீகப் பாதையும் ஆரோக்கிய வாழ்வும் என்ற தலைப்பின் ஊடாக சில வழிபாட்டு அவசியங்கள் பற்றி அலசிப் பார்த்தோமல்லவா? இப்போதும் அவற்றைத் தழுவித் தவக்காலச் சாலைக்குள் காலைத் தடம்பதிப்பதற்கு தக்கவிதமாகத் தயார்ப்படுத்த ஒரு சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது.

இன்பமயமான இறைவனுக்கே ஸ்தோத்திரமும் துதிகன மகிமையும்.

எங்கள் சிந்தனைச் சிறகுகளுக்குச் சிக்கெடுப்பதற்கு ஒரு சீப்புத் தேவையாக இருக்கிறது அப்படியொரு சந்திப்பில், சந்தோஷத்தில் உங்களுக்கும் தோழனுக்கும் ஒரு சாமரம் வீசுகிறேன்.

"என்னங்க, உடம்பு இப்படி இளைச்சுப் போயிருக்கு" இப்படி ஒருவர் கேட்டார்

"நான் ஒரு வாரமாக உண்ணா விரதம்" இப்படி மற்றவர் பதில் போட்டார்

நீங்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும் உணவு இருந்தும் உண்ணாமல் இருப்பதற்குப் பெயர்தான் உபவாசம். உணவு இல்லாததால் உண்ணாமல் இருப்பதற்குப் பெயர் பட்டினி அது உண்ணா விரதமாகாது.

எனக்குப் பளைய ஏற்பாட்டில் நடந்த ஒரு சம்பவம் ஞாபகத்தில் வருகிறது. அப்போது அவர்கள் உண்ணாமல் அந்நாட்களைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் அப்போது அவர்களைச் சந்திக்க விருந்தினர் வந்தார்கள். அந்த வேளையில் வந்தவர்களின் முகம் கோணாமல் அவர்களுடன் இணைந்து விருந்தோம்பி அவர்களை மகிழ்வித்து வழியனுப்பிவிட்டு பின்னர் மீண்டும் தம்முடைய தவத்தைத் தொடர்ந்தார்கள்

அத்தகைய மனிதநேயப் பண்புக்கு முன் எத்தகைய தவமும் எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

எத்தனையோ பிள்ளைகளுக்கு ஒருவேளைச் சோறு இல்லாத நிலையில் எம் உறவுகளே!! **கொண்டாட்டம் என்ற களியாட்டத்தின் பின் திண்டாட்டம் ஏதுமின்றி தட்டிக்கொட்டும்** அன்னத்தைக்காணும் போது என் நெஞ்சில் எத்தனை தடவை குருதி கசிந்திருக்கிறது தெரியுமா?

உங்கள் களியாட்டத்தினைக் குறைத்துச் சொல்லவில்லை மாறாக **கொட்டிக்கொள்ளும் உணவுகளைக் குறைக்கச்** சொல்லுகிறேன் –

இது கூட ஒரு தவமே!

என் தந்தை கொஞ்சம் பக்தி பித்தன்தான்

என் தமையனின் வெளிநாட்டுப் பயணம் கட்சிதமாய் அமைந்தது என்று ஒரு நன்றித்திருப்பலி ஏற்பாடு செய்திருந்தார். எனக்கு அத்திருப்பலியில் ஒப்பில்லை காரணம் திருப்பலியைத் தவிர்க்க வேண்டும் என்றல்ல, திருப்பலிக்கு கட்டிய பணத்துடன் இன்னும் கொஞ்சம் இணைத்து ஏலாத யாருக்காவது சிறு உதவி செய்யலாம் என்ற என் அவிப்பிராயத்தை எனது தந்தை நிராகரித்ததால் தான்.

திருப்பலி எப்படியும் நடக்கத்தான் போகிறது அதில் பங்கு கொண்டு இறைவனுக்கு நன்றியைச் சொல்லுங்கள் என்று சொன்னேன் . அது காற்றில் அகப்பட்ட கடதாசி மாதிரி கைநழுவிப்போனது.

காலம் உருண்டோடியது கடசியில் நடந்தது காணிக்கைத் திருப்பலி கைநழுவிப் போனது.

காரணம்?

நிராகரிக்கப்பட்டு வதிவிடத் தொல்லையால் நாடு கடத்தப்பட்டார் எனது தமையன்.

தேடினார் தரையில் தானுான்றத் தேடினார் இன்றுவரை தேடிக்கொண்டே இருக்கிறார்.

இன்று லண்டனில் விசா நிராகரிக்கப்பட்டு வினாப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

கடவுளின் காணிக்கை காற்றோடு போய்விட்டதா என்ன ?

இதற்குப் போய்க் கடவுளைக் கோவிக்க முடியுமா?

இல்லை விதி என்று விட்டுவிட முடியுமா?

கடவுளுக்கான காணிக்கையையோ, அல்லது திருப்பலி விருந்தினையோ குறைத்துக் கூறவில்லை ஏலாதவருக்கு ஒருவேளைச் சாப்பாடாவது போட்டிருந்தால் கடவுளுக்கான காணிக்கை இரட்டிப்பாகிறது என்பதுதான் எனது வாதம்

பொருளியலில் ஒரு கோட்பாடு இருக்கிறது

"ஒரு பொருளின் உற்பத்திக்காக விட்டுக்கொடுக்கப்பாடுகின்ற மற்றைய பொருளின் அளவினை அமையச் செலவு எனலாம்"

இது வாழ்வின் விம்பம்

பல்கலைக் கழகம் செல்வதற்காய் பன்னிரண்டு வருட வாழ்க்கையை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

வெளிநாடு போவதென்றால் உள்நாட்டு சொத்துக்களை விற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது,

லண்டன் போவதென்றால் இத்தாலி விசாவை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது,

இத்தாலி பிரஜா உரிமையைப் பெறுவதற்காய் இலங்கைப் பிரஜா உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது,

இறக்க வேண்டும் என்றால், பிறந்த வாழ்வை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது.

"ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் உண்டென்கிறது" விஞ்ஞானம்

கடவுளுக்குக் கொடுக்கும் காணிக்கைக்கும், ஒன்றை விட்டுக் கொடுக்க வேண்டியிருப்பதோடு ஒரு எதிர்த்தாக்கத்தையும் எதிர்பாற்கிறது சமூகம் அதற்கு சாதாரண மொழியில் சொன்னால் "கையூட்டு" கவர்ச்சியாகச் சொன்னால் "காணிக்கை. "

நல்ல மருந்து கசக்கத்தான் செய்யும்

பகுத்தறிவை பழிக்கத்தான் செய்யும்

பரமனைக்கூடப் பாடுபடுத்திச் சிலுவையில் அறைந்த பார்தானே இப்பூமி.

உண்மைகள் உரிய இடத்தில் கசக்கத்தான் செய்யும்.

கோவிலில் காணிக்கை செலுத்தும் போது பலரை நான் அவதானிப்பதுண்டு காரணம் எவ்வளவு தூரம் கடவுளுக்கு

அவர்களிடமிருந்து வழங்கப்படுகிறது என்பதற்காக. அவர்கள் போடும் தொகையில் சிறிதைக் கூட கடவுள் ஏற்றதாக இல்லை.

இரண்டு விரல்களால் (சுட்டுவிரலும்– கட்டைவிரலும்) ஏதோ அசிங்கத்தைத் தூக்கி போடுவதுபோல் போட்டுவிட்டு அக்கம்பக்கம்

திரும்பாமல் கடைக்கண்ணால் யாரும் பார்க்கிறார்களா? என்பதனை இரகசியமாக நோட்டம் விடுவார்கள்.

வேறுசிலர் காணிக்கை பெற வரும் பணியாளனைக்கண்டதும் வேறுபக்கம் திரும்பிவிடுவார்கள்.

நீர் எப்படி என்று பலர் என்னைக் கேட்பது புரிகிறது.

உண்மையில் எவ்வளவு போடுகின்றேன் என்று பார்க்காமலே மற்றவர்கள் அறியாத வண்ணம் பைக்குள் இருந்து எடுக்கும் பணத்தைப் பொத்திய படியே போட்டுவிடுவேன்– அது கடவுளுக்குக் கொடுப்பதாக நினைத்து அவர் பார்த்தால் போதும் என்பதை மட்டுமே கருத்திற் கொள்வேன்

எனது செய்கையைச் சரிப்படுத்தியும் மற்றவரின் செய்கையைக் கறைப்படுத்தியும் எனது சாமர்த்தியத்தை வெளிக்காட்டுவதாக நினைக்கவேண்டாம்.

எம்மைப் பற்றி நாம் சிந்திக்கத் தவறும் போது மற்றவர் சுட்டிக்காட்டும் வரையில்

எம்மிடம் உள்ள கறைகளும் குறைகளும் களையப்படுவதில்லை.

என்னைப் பற்றிக் கூட நீங்கள் சுட்டிக்காட்டும் வரையில் என்னிடமுள்ள பிழைகள் பிடுங்கப்படுவதில்லை.

நான் இந்தியாவில் இருந்தபோது எனது நண்பர் சபரிமலைக்கு போவதற்காக ஆயத்தம் செய்தார். அந்தக் காலத்தில் அவரைப் பெயர் சொல்லி அழைப்பது கிடையாது. அவரும் யாரையும் பெயர் சொல்லி அழைப்பது கிடையாது.

"சாமி" என்றுதான் அழைப்பது வழக்கம்.

அது எனக்கு ஒரு சிந்தனையைத் தூண்டி விட்டது. உயிர் இருக்கும் போதுதான் ஆளாளுக்கு ஒரு பெயர்– அது போய்விட்டால் எல்லாருக்கும் ஒரே பெயர்தான்

அது . . . . .!?

இந்துக்களில் ஒரு வழக்கம் உண்டு, குழந்தைகள் இறந்தவரைப்பற்றிக் கேட்கும் போது, பெரியவர்கள் அதற்கு இறந்தவரைச் சுட்டிக்காட்டி அவர் சாமியிட்ட போய்ட்டார் என்பார்கள்.

ஒரு விதத்தில் அவை உண்மையே.

பெயர் எல்லாம் நாங்களே வைத்துக்கொண்டது தானே.

மிருகங்களில் ஆடு என்றால் அது எந்த மொழியிலும் ஆடுதான் அவற்றின் பாசையின் ஒலியும் ஒன்றுதான்.

பறவையில் காகம் என்றால் எந்த மொழியிலும் காகம் தான் அவற்றின் கரையுந் தன்மையும் ஒன்றுதான்

அது போலவே மனிதர்களும் எந்த மொழியிலும் மனிதர்களாகத்தான் இருக்க வேண்டும் ஆனால் அப்படியில்லை. ஆவி பிரியும் வரையில் பாவி உடல் படும் பாடு பரிதாபந்தான்.

ஆவி பிரிந்த பின்னர் அவரவர் செய்த தானமும் தவமும் மட்டுமே அவருக்கு மிச்சம்.

புத்தன் இருந்தார் – இறந்தார்.

இயேசு இருந்தார் – இறந்தார்.

முகமது நபியும் இருந்தார் – இறந்தார்.

அவர்களின் உடல் அணுவளவிற்கும் காணமுடியாத போது, விட்டுச் சென்ற சத்திய வாக்கு மட்டும் ஆண்டாண்டு காலமாய் அதி வேகமாய் வீறு நடை போட்டுக் கொண்டு செல்கிறது என்றால் அது தவ வலிமையே!

"உன்னை நீ அறிந்து கொள்" என்ற பகுதியூடாக பல மாதங்களுக்கு முன்னர் உங்களுடன் உரையாடிய சம்பவங்கள் மறந்து போயிருக்கும் என்று நினைக்கிறேன்.(இப்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது)அதை மீண்டும் ஒருமுறை புரட்டிப் பாருங்களேன். அதில் தவத்தைப் பற்றி ஆங்காங்கே தொட்டுச் சென்றோம். இப்போது

தவக்காலத்தினுாடாக அதனை மீட்டுக் கொள்ள ஒரு சந்தர்ப்பங் கிடைத்தது. மகிழ்ச்சியே!!

**"தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்கா தெனின்"**

இரண்டாம் பாகம் தொடரும்

அன்பன் அருகன்

# யாரவர்கள்?...

உலகின் பார்வையில் சிறியதொரு புள்ளி இவர்கள் தாய்மண்

தாய்மண்ணில் இரு இனத்தைக்கொண்ட சிறிய மக்கள் கூட்டம்

கூட்டத்தின் சீரற்ற சிதம்பல் இவர்கள் தலைவிதியின் கோலம்

கோலத்தால் மூன்று தசாப்த்தத்திற்கு மேலாக இடம்பெயர்ந்த பாதம்

பாதத்தின் பாதையில் இந்து, கிறீஸ்தவம், முஸ்லீம்களை கொண்ட கூட்டம்

கூட்டத்தின் தொகையால் இத்தாலியில் 25000பேர் சிந்திச்சிதறி வாழும் தோற்றம்

தோற்றத்தின் விம்பம் தொழிலும் தொல்லையும் தீர்க்க றெஜியோவை நோக்கி பயணம்

பயணம் தொடர்ந்தும் அரசின் சில சட்டத்தடைகளால் பதிவில் பதகமான மாற்றம்

மாற்றத்தின் முன்பே நாவைந்து வருடத்திற்கும் மேல் றெஜியோவில் இவர்களின் திடம்

திடம் திட்டமாக இவ்வருடத்திலேயே பன்மடங்கு பெருக்கெடுத்த நாட்டம்

நாட்டத்தால் அகிலமெங்கும் தடங்கள் தாவாத இடமில்லை என்ற ஆணவம்

ஆணவத்தால் கல்வி கலாசாரம் மொழி ஆலோசனை வசதிவாய்ப்பு எதிர்கால தாக்கம்

தாக்கத்தைத் தீர்க்க “UNGA & TNGA” போன்ற கூட்டமைப்புக்களின் தோற்றம்

தோற்றத்தால் தீர்க்கப்படுகின்ற 25000 குடிகளின் தேக்கத்தின் தாககம்

தாகம் என்று தாய்த் தேசத்தில் உறவின் தலைகள் துண்டிக்கப்படுகின்ற இவர் சரிதம்

சரிதத்தில் பெயர்போன தேசம் இவர்கள் தேசம்

தேசம் என்ன தேசம் ??? யாரிவர்கள் இலங்கையர்…

மொழியென்ற ரீதியில் பாகுபாட்டைக்காட்டி

இனம் என்ற ரீதியில் எதிர்ப்புதனைக் கூட்டி

அழிவிற் செல்லும் இலங்கை அரசின் சொத்து

அருகிச் செல்லும் இயற்கைகளின் காட்சி

தீவிர வாதம் என்றொருபுறம்

பயங்கரவாதம் என்றொருபுறம்

அழிவின் பாதையில் அரங்கேறிக் கருகும் தேசம்

இயல் இசை நாடகம், கலை கலாசார சாதகம்

இவையனைத்தும் இவர்களின் விசேட சாகசம்

பரதம் யோகா இவையெல்லாம் பாரம்பரிய பூஜகம்

இப்போதெல்லாம் இவை அழிந்து செல்லும் கார்மேகம்

உலகெங்கும் புலம் பெயர்ந்து நிம்மதியின் நிழலில்

இத்தாலிதேசத்தில் றெஜியே நகரத்தில்

கூடிவரும் கும்பலிவர், சொந்தமாக வீடுகளும்

சுகந்த வாசங்களும் வீசுகின்றனர்.

இலங்கையின் " சிங்களம், தமிழ்" இருனத்தின் பாகுபாட்டைக் காரணங்காட்டி, பெரும்பான்மை இனத்தின் ஆழுமைக்குட்பட்ட "சிங்கள"அரசு, சிறுபான்மை இனத்தின் உரிமைகளைச் சட்டத்திற்குப் புறம்பாகப் பறிப்பதன் காரணத்தால் தேற்றுவிக்கப்பட்ட போராட்டம் இருபால இனத்தவரையும் உலகநாடுகளுக்கு இடம்பெயரச்செய்தது.

அதிகபட்சமாக தமிழினத்தை உலகளாவிய ரீதியில் உயிர்வாழச்செய்தது. இது இத்தாலிதேசத்தையும் விட்டுவைக்கவில்லை. கிட்டத்தட்ட 25000பேர் இங்கு குடிகொண்டுள்ளனர். இதில் பலெர்மோ, றோம், நாப்போலி, றெஜியோ எமிலியா, பொலோனியா, பேர்கமோ… போன்ற பல்வேறு தேசங்களிலும் பரவி வாழ்கின்றனர் இருந்தும் தற்போது அதிகமாக பல்வேறு பகுதிகளில் இருந்து அதாவது பலெர்மோ, நாப்போலி போன்ற இடங்களில் இருந்து றெஜியோவை நோக்கி நகர்வலம் வநஇது

கொண்டிருக்கின்றனர் அதற்கு வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கைத்தரம் போன்ற காரணங்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன. எனினும் இங்கு வருகைதரும் மக்கள் உடனடியாக கொமுனைகளில் தமது பதிவினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது காரணம் இருப்பிடப் பிரச்சனை குடும்பச்சிரமம் போன்றன தடைகளாகவும் அரசின் சிலசட்டத்தின் சிரமம் பாரமாகவும் அமைவது மாகும்.

இடம் பெயர்ந்தோர் தமது தேசத்தில் இருந்து இங்கு உயிர்தப்பியிருந்தாலும் தாமும் கலாசார பாரம்பரியத்தை மறந்து போய்க்கொண்டிருப்பதென்பதும் உண்மையே! சிறுவர் பராமரிப்பு மகளிர்தொடர்பான சிரமங்கள் தமது மக்களிடையேயுள்ள தொடர்பாடல் சிரமங்கள் போன்றன சில பின்னடைவினை ஏற்படுத்துகிறது.

மொழி தொடர்பாகவும், வைத்தியம் தொடர்பாகவும் கல்வி தொடர்பாகவும், ஆலோசனை தொடர்பாகவும் ஆவணத்தகவல் தொடர்பாகவும் இம்மக்களுக்கு பாரிய சிக்கல்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. புல்வேறு அமைப்புக்கள் உருவாகிய போதிலும் இவ்வாறான சிரமங்களை அவ்வமைப்பு தீர்த்துவைக்க முன்வரவில்லை இதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றைய வெளிநாட்டவருடன் ஒப்பிடும் போது பின்தங்கிய நிலையில் இருந்தது. இதனை கடந்த 5 வருடங்களாக இயங்கிவரும் “UNGA & TNGA” இவ்வமைப்புக்கள் ஈடுசெய்து வருகின்றது.

இம்மக்கள் தமது தேவைகள்கருதி பலசரக்குக்கடைகள் தொலைத்தொடர்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்றன இம்மாவட்டத்தில் கடந்த காலத்திலிருந்து நடாத்திவருகின்றனர். இம்மக்கள் அதிகப்படி எந்தவிதமான சிரமங்களையும் இத்தாலி அரசிற்கோ இத்தாலி மக்களுக்கோ கொடுத்ததில்லை என்பது மதிக்கக்கூடியதே.

பலர் இவர்களுள் இத்தாலிய தேசியத்தைப் பெற்றிருக்கின்றனர் எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 25000பேருக்குமேல் இருந்த போதிலும் 500பேர்மட்டுமே பதிவில் காணப்படுகின்றனர். இன்னும் சிறிது காலத்தில் மேலும் அதிகரிக்கக்கூடும் என கருத்துக்கணிப்பு எடுத்துக்காட்டுகிறது.

இங்கு பொதுவாக றெஜியோ மத்திய பகுதியிலும் கஸ்ரல் நோவோ சோத்தோ பகுதியிலும், றுபியேராபகுதியிலும், பெரும்பாலானோர் வாழ்கின்றனர் இவர்களுள் தொழிற் சாலைகளிலும் உணவுசாலைகளிலும் ஆண்கள் பெரும்பாலும் வேலை செய்ய, மகளிர் வீட்டுவேலைபோன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

பெரும்பாலானோர் வீடுகளைச் சொந்தமாகக் கொள்வனவு செய்துள்ளனர், எனினும் அவர்கள் மாறுபடக்கூடிய வட்டிவீதத்தில் மூத்துவோ செய்தது பெறும் சிக்கலில் கொண்டு போய் வீட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழில் அருகன்

இத்தாலியில் ஷானா


# FLUSSI 2007 க்கான தகல்வல்கள்

Reggio Emilia வில் தற்போது Flussi செய்தவர்களீள் ஆவணங்கள் தவறாக சமர்பித்தவர்களுக்கு Prafattura தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. புடிப்படியாக வருகின்ற 5ம் மாதத்திற்குள் வழங்கப்படவிருக்கின்ற தொகை வெளியீடுகள் வெளியிடப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


# பூமாலை

பூமாலை என்ற இச்சிறுவர்பகுதியில் பங்குபெறுபவர்கள், இதில் வெளியரும் பகுதியினை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பிவைத்தால், அடுத்த மலரில் அவை வெளியிடப்படும். இது தொடர்பாக உங்கள் குழந்தைகளையும் செயல் வீரராக்குங்கள். அவர்களுடைய செயற்பாடுகளை பெருமைப்படுத்துங்கள் அது உளவியல் ரீதியில் அவர்களுடைய அறிவினை மேன்மேலும் விருத்தியடையச் செய்யும். தேவைப்படும் விபரங்களுடன், விருப்பின் பெயரில் அவர்கள் புகைப்படத்தையும் இணைத்து அனுப்புங்கள். பங்குபெறும் சிறுவர்கள் பரிசில்களை வெல்லும் வாய்ப்புனக்களும், வேறு பல்வேறு பெருமைக்கும் இடமுண்டு.


சிறார்களே உங்கள் பட்டுக்கையால் இலக்கங்களை இணைத்துப் பாருங்கள்….



# வர்ணந்தீட்டல் – I




# வர்ணந்தீட்டல் – II



## பிரான்ஸ் உள்ளூராட்சி தேர்தலில் 12 தமிழர் வெற்றி

### வீரகேசரி நாளேடு



பிரான்சில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 12 தமிழர்கள் வெற்றிபெற்றுள்ளனர். இரண்டு சுற்றுக்களாக நடைபெற்ற இத்தேர்தலில் முதல் சுற்று கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஐந்து ஈழத் தமிழர்கள் வெற்றி பெற்றனர்.

இவர்களுடன் தமிழர்கள் பலராலும் அறியப்பட்ட மொரீசியசை சேர்த்த திருமதி லீலாவதி ராஜேந்திரம், பாண்டிச்சேரியை சேர்ந்த அலன் ஆனந்தன், மற்றும் சந்திரசேகரம் பரசுராமன், திருமதி சாமாநீலவண்ணன் ஆகியோரும் வெற்றி பெற்றனர். கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற இரண்டாவது சுற்றுத் தேர்தலில் ஏனையோர் வெற்றிபெற்றுள்ளனர்.

**NEWS from © Express Online :**
Published:3/19/2008 9:23:41 AM

## ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு வடக்கும் விரைவில் மீட்கப்படும் - ஜனாதிபதி

### வீரகேசரி இணையம்



கிழக்கு மாகாணம் முழுமையாக மீட்கப்பட்டமையினால் தான் அங்கு ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதேபோல் வடக்கிலும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக புலிகளிடமிருந்து அந்தப் பகுதியும் விரைவில் மீட்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிழக்கில் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமானதொரு பதிவாகும். ஏனெனில் தென்பகுதி தேர்தலில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் கூட இங்கு இடம்பெறவில்லை. கிழக்கு மாகாணத்தில் மக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கான அனைத்து சந்தர்ப்பங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெரிவான 101 உறுப்பினர்

நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அலரிமாளிகையில் பதவி ஏற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது: கிழக்கு மாகாணத்தில் அங்குள்ள மக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கான அனைத்து சந்தர்ப்பங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. ஜனநாயக வழியின் கீழ் வாழ்வது, துப்பாக்கிகளின் அதிகாரத்தின் கீழ் வாழ்வதனைப் போல் அல்ல என்பதை அனைவரும் உணரவேண்டும்.

ஜனநாயக வழியில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமானால் அதற்கு நீடித்த பொறுமையும் அதேநேரம் உணர்வுபூர்வமான பொறுப்பும் மிக மிக அவசியம். மக்களது பிரச்சினைகள் ஜனநாயக வழியிலேயே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டியவை என்ற நிலை இன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து அதிகாரங்களும் இன்று கிழக்கு மக்களாகிய உங்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு முழுமுதற் காரணம் கிழக்கு மாகாணம் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்டமையேயாகும். அதேபோல், வடக்கிலும் ஒரு ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்காக அந்த பிரதேசமும் கூடிய விரைவில் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டுவிடும்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்கள் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமானதொரு பதிவாகும். ஏனெனில், தென்பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் வழமையாக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் அங்கு இடம்பெறவில்லை. கிழக்கை நிருவகிக்கும் உரிமை உங்களது கையில் ஒப்படைத்திருப்பதும் யாரும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயமேயாகும். அப்படி என்றால் அந்த பிரதேச மக்களது அபிலாஷைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது அவர்களால் தெரிவு செய்யப்பட்ட உங்களது பொறுப்பாகும்.

ஏனைய பிரதேசங்களில் உள்ள மக்கள் எந்தளவு சுதந்திரமாகவும் அனைத்து உரிமைகளும் பெற்று வாழ்கின்றார்களோ அதே அளவு சுதந்திரமும் உரிமையும் வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அது தற்போது கிழக்கு மாகாணத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விமர்சனங்களையிட்டு அலட்டிக்கொள்ளாத அதேவேளை, மக்களது தேவைகள் குறித்து தேடுதல் உள்ளவர்களாக செயற்பட வேண்டியது ஜனநாயக வழிமுறையின் ஓர் அங்கமாகும்.

**NEWS from © Express Online :**
Published:3/19/2008 12:24:12 AM

# நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

வீரகேசரி இணையம்



இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் நோர்வேயின் அமைதி முயற்சிக்கான அனுசரணையாளர்கள் வன்னி சென்று விடுதலைபுலிகளுடன் அமைதி முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் மனிதபிமான பணிகளை பார்வையிடவும் வேண்டும், இவ்வாறான வேண்டுகோள் ஒன்றை நாம் இலங்கை அரசிற்கு விடுத்திருக்கிறோம்,என நேற்றும் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்றுவரும் மோசமான மனித உரிமை மீறல்களையும் எமது கவனத்திற்கு எடுத்துள்ளோம் எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளோடு உரிய முறையில் பேசுவதற்கு இலங்கையில் இடம்பெற்றுவரும் உள்நாட்டு போரினால் இலங்கையில் சிவில் சமூகம் பெரும் நெருக்கடிற்குள் தள்ளப்பட்டுள்ளது இவ்வாறு நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

**NEWS from © Express Online :**
Published:3/19/2008 11:15:15 AM